DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.50/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.02 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | ஆசிரியர் |
| பெயர் | - | அனுசுயா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஹரிகரன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஸ்டேன்மோர் | வயது | - | 27/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-10-2025</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜரில்லை)**

(1, 2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
(எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த BNSS பிரிவு 348-ன் கீழான மனு Crl.M.P.No.898/2025, அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்.)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் முதல் விசாரணையில் கதவை உடைத்ததும் நாங்கள் என்ன சத்தம் என்று வந்து பார்த்த போது, அவங்க பையன் வர்சன் என்று நினைக்கிறேன். பாத்ரூமில் இருந்து கட்டையால் என் சித்தியின் மண்டையை உடைத்துவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நிஜா சித்தியின் முடியை பிடித்து தரதரவென்று வெளியே இழுத்து சென்று காவாய் மாறி இருக்கும் துணி துவைக்கும் கல் இருக்கும் இடத்தில் போட்டுவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நிஜாவின் மாமியார் என்று நினைக்கிறேன் அவர் என்னை கட்டையால் left side கையில் அடித்துவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது இடது புற கையில் அடிபட்டதற்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. திருப்பூரில் சிகிச்சை பார்த்தேன். 1-வது எதிரியின் கணவர் பெயர் என்ன என்றால் சுரேஷ் ஆகும். சம்பவம் நடப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக சுரேஷ் அங்கு வந்தார் என்றால் இல்லை. ஏற்கனவே 1-ம் எதிரி மற்றும் அவரது கணவர் சுரேஷ் மீது எனது சித்தி வால்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த புகாரில் எதிரிகள் மீது போலீசார் நடவடிக்கைகள் எடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சித்தி கொடுத்த புகார் பொய்யான புகார் என்பதால் அந்த புகாரில் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் மாரியம்மாள் என்பவர் எனது சித்திக்கு எதிராக கொடுத்த புகாரில் நான் விசாரணைக்கு வந்தேனா என்றால் மாரியம்மாள் போலீசாரிடம் கொடுத்த புகாரிற்கு விசாரணைக்கு காவல் நிலையம் வந்திருந்தேன். மாரியம்மாள் எதற்காக எனது சித்தியின்

மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் பக்கத்தில் ஏதோ சண்டை என்பதால் புகார் கொடுத்திருந்ததாக சொன்னார். எனது சித்தி அ.சா.1 மாரியம்மாளின் கணவர் சந்திரசேகர் என்பவருடன் தவறான உறவு வைத்து அவரிடமிருந்து பணத்தை பறித்தால் நான் அந்த புகார் கொடுத்து விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதுபோல, எனது சித்தி அ.சா.1, 1-ம் எதிரியின் கணவர் சுரேஷ்குமாருடன் திருமணம் கடந்த உறவில் இருந்ததால் அதை உறவினர்கள் கண்டித்தால் எனது சித்தி எதிரிகளுக்கு எதிராக தவறான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவதினத்தன்று இரவு அ.சா.1, 1-ம் எதிரியின் கணவர் சுரேஷ்குமாரும் அந்த காலியாக இருந்த வீட்டில் தனிமையில் பேசிக்கொண்டிருந்ததை தர்ஷன் பார்த்தால் தர்ஷன் அவரது அப்பாவான சுரேஷ்குமாரை தட்டிக்கேட்டார் என்றால் சரியல்ல. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ஸ்டேன்மோர் எஸ்டேட்டில் குடியிருக்கிறேன். எனது சித்தி மாணிக்கா எஸ்டேட்டில் குடியிருக்கிறார். துவைக்கிற கல் எனது சித்தி வீட்டில் பின்புறம் உள்ளது என்றால் சமையல் அறை பக்கம் உள்ளது. மாணிக்கா தொழிற்சாலை செல்லும் ரோடு வீட்டின் முன்பக்கம் உள்ளது என்றால் பின்பக்கம் உள்ளது. நான் சொன்னது போல, சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தி குடியிருக்கும் வீட்டின் அருகில் 6 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு முருகன், சந்திரசேகரன், செல்வி, ஆறுமுகம், சுப்பு ஆகியோர்களின் வீடு வரிசையாக உள்ளது என்றால் சரிதான். சித்தி வீட்டிற்கு முன்பக்கம் சிவா என்பவரின் வீடு உள்ளது என்றால் சித்தி வீட்டிற்கு பின் பக்கத்தில் மேலே உள்ளது. நான் சொல்லுவது போல சம்பவம் நடைபெற்றிருந்தால் அங்கு இருந்தவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் சம்பவம் முடிந்த பிறகு தெரியும். நான் சொல்லுவது போல எந்த சம்பவம் நடைபெற வில்லை என்றாலும், முன்விரோதம் காரணமாக எனது சித்தி கொடுத்த தவறான புகாருக்கு உறுதியூட்ட நான் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை யாரும் தாக்கவில்லை என்பதால் தான் நான் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.